29th January 1963]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) & (இ) பாராளுமன்ற அங்கத்தினர்களும், மாநிலச் சட்டப்பேரவை அங்கத்தினர்களும் நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிற பல்வேறு அபிவிருத்தி வேலைகள் பற்றி நன்கு அறிந்துள்ள காரணத்தினால், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், நகராட்சி மன்றங்கள் போன்ற ஸ்தாபனங்களில் அவர்கள் கலந்து கொள்வதற்கு வகை செய்ய வேண்டும் என்ற கருத்து 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 25-ம் தேதியில் நடைபெற்ற மாநில ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின் ஷரத்துக்களின்படி எம்.எல்.ஏ.-க்களும், எம்.எல்.சி.-க்களும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். ஆனால் அந்தக் கூட்டங்களில் அவர்களுக்கு வோட்டுரிமை கிடையாது. கவுன்சில் தலைவராக அல்லது துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பெறவும் அவர்களுக்குரிமை கிடையாது. 1920-ம் ஆண்டு சென்னை ஜில்லா முனிசிபாலிடிகள் சட்டத்தில் இத்தகைய ஷரத்து எதுவுமில்லை. இத்தகைய ஷரத்து ஒன்றை 1920-ம் ஆண்டு சென்னை ஜில்லா முனிசிபாலிடிகள் சட்டத்தில் சேர்ப்பது பற்றி அரசினர் ஆலோசித்து வருகின்றனர்.

(*a*) & (*b*) A suggestion was made at the meeting of the State Informal Consultative Committee held on 25th July 1961 that the Members of Parliament and Members of State Legislature shall be associated with institutions such as panchayat union councils and municipal councils by virtue of their wider knowledge of these various developmental activities taking place in the country. Under the provisions of the Madras Panchayats Act, 1958, Members of the Legislative Assembly and Members of the Legislative Council can take part in the proceedings of the panchayat union councils without a right to vote or to be elected as chairman or vice-chairman of the council. There is no such provision in the Madras District Municipalities Act, 1920. A proposal to include a similar provision in the Madras District Municipalities Act, 1920, is under the consideration of the Government.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்கள் நகர சபைகளில் கௌரவ உறுப்பினர்களாகப் பணி புரியவேண்டும் என்ற திட்டம் எப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரப்படும்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது?

*Pasteurization Scheme (Madurai)*

* 6 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of Madurai Pasteurisation Scheme included in the Third Five-Year Plan, and the nature and extent of help offered by the UNICEF and the FAO?

[29th January 1963

THE HON. SRI P. KAKKAN : A paper * is placed on the table of the House.

*இது சம்பந்தமான ஓர் அறிக்கை சபைமுன் வைக்கப் பட்டுள்ளது.*

**ஜில்லா முன்சீப் கோர்ட்டு (சங்ககிரி)**

* 7 **கேள்வி.—திரு. ந. ப. செங்கோட்டுவேலு :** *கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—*

*சேலத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சங்ககிரி ஜில்லா முன்சீப் கோர்ட்டை சங்ககிரிக்கு மாற்றும் உத்தேசமுண்டா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

*Prohibition*

* 8 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to revise the prohibition policy in the State in view of national emergency ?

THE HON. SRI P. KAKKAN : No.

*இல்லை.*

**திரு. கே. ஏ. மதியழகன் :** *பொதுவாக, எல்லா மாநிலங்களிலும் மது விலக்கை ரத்து செய்துவிடவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை உருவாகியும், டில்லியில் நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள், இதை நீடிக்கவேண்டும் என்று பிடிவாதமாக வற்புறுத்தியதின் காரணத் தினுலேதான் இது ரத்து செய்யப்படாமலிருக்கிறது என்பது உண்மையா ?*

**கனம் திரு. கு. காமராஜ் :** *எல்லா மாநிலங்களிலும் மது விலக்கை ரத்து செய்யவேண்டும் என்று யார் சொன்னுர்கள் ? பத்திரிகைகளிலே அங்குமிங்குமாக வந்ததை வைத்துத்தானே கனம் அங்கத்தினர் யூகமாகக் கேட்கிருர் ? அதுமாதிரி ஒன்றும் யோசனை இல்லை.*

**திரு. கோ. சி. மணி :** *குற்றங் குறைகளைத் தீவிரமாகக் கண்டு பிடித்து மதுவிலக்குத் திட்டத்தை மேலும் வெற்றிகரமாக நிறை வேற்றுவதற்காக ஸ்பெஷல் போலீசாரை நியமிக்க ஏதாவது யோசனை இருக்கிறதா ?*

**கனம் திரு. பூ. கக்கன் :** *ஸ்பெஷல் போலீஸ் நியமிக்கப்பட வேண்டும் என்கிற அவசியம் இல்லை. இப்பொழுது இருக்கும் போலீசை வைத்துக்கொண்டே, எவ்வளவு துரிதமான நட வடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ளுகிறோம்.*

---

* Printed as Appendix I on pages 99-100.